Registered as News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　PEOPLES DAILY　　மக்கள் தினசரி

நாதம்: 02　　திருவள்ளுவர் ஆண்டு 2022　　ஐப்பசி 11　　(28 - 10 - 1991)　　திங்கட்கிழமை　　ஓசை: 252

## வாழ்க்கைத்திறன் கல்வி வளர்க்க நடவடிக்கை

(நல்லூர்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் ஆண்டு 7இல் வாழ்க்கைத்திறன் கல்வியைவளர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாழ்க்கைத்திறன் கற்கைநெறி பற்றிய விபரங்களை சகல கோட்டக்கல்வி அதிகாரிகளிடம் யாழ் பிரதேச கல்விப் பணிமனை கோரியுள்ளது. 1991 இல் வாழ்க்கைத்திறன் கல்வி ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரத்தையும், 1992 இல் இக்கல்வியை ஆரம்பிக்க சிபார்சு செய்யப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவுப் பாதையை திறப்பில் சிக்கல்;

# இராணுவ விரிவாக்கத்திற்கு உதவுமா?

## அரசின் நோக்கம் குறித்து புலிகள் சந்தேகம்

## மாற்று வழிகுறித்துப் பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு ஊடாகச் செல்லும் கண்டிவீதியை போக்குவரத்திற்கு திறந்து விடுவது சம்பந்தமாகப் புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. உருப்படியான உத்தரவாதங்களும், போர்நிறுத்த உடன்பாடுகளுமின்றி ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிடுவது இப்பிராந்தியத்தில் சிங்கள இராணுவ மேலாதிக்கத்திற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கலாமென இவ்வட்டாரங்கள் அச்சம் தெரிவித்தன.

யாழ்.குடாநாடு மீது பெரிய படையெடுப்பு நடாத்தப் போவதாக சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்களை மிரட்டிக்கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் ஆனையிறவுப் பாதை காப்பு அரண்களைத் தளர்த்துவது மிகவும் ஆபத்தானது என புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இவ்விதமான அச்சுறுத்தல்கள் பற்றியும், புலிகளின் சந்தேகங்கள் குறித்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் இப்பேச்சாளர் கூறினார்.

அப் பேச்சாளர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில் வடபகுதியில் இராணுவ நடவடிக்கை தொடரவுள்ளதாக பெரிதாக அச்சுறுத்தி வரும் சிறிலங்கா அரசாங்கம் உணவு வழங்குதல் என்ற போர்வையில் இரா (4 ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 15இல் பரீட்சை முடிவு

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டிற்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி அளவில் வெளிவரும் என எதிர்பார்ப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பரீட்சைக்கு 1,50,000 பரீட்சார்த்திகள் தோற்றினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேநேரம் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இப்பரீட்சை நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ பொலிசிற்கு ஆள்சேர்ப்பு

தமிழீழப் பொலிஸ் சேவைக்கு உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. ஆண் - பெண் இருபாலாரும் சேர்க்கப்படவுள்ளனர். இதற்கான அறிவித்தல் விரைவில் வெளிவரும்.

## குடும்பஸ்தர் காலை இழந்தார்

இராணுவத்தினர் வைத்த மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 500 இல.தமிழ் அகதிகள் விரைவில் திரும்புவர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் முதல் தொகுதியில் 500 இலங்கைத் தமிழர்கள் இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு வருவார்கள் என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இதனைத் தெரிவித்த பிரட்மன் வீரக்கோன் இரண்டாயிரம் பேரை முதல் தொகுதியில் இலங்கை அனுப்புவதற்கு இந்தியா முடிவெடுத்தபோதும் இலங்கை அரசு தற்போதைக்கு 500 பேரை மட்டுமே அனுப்பிவைக்குமாறு கேட்டுள் (4ஆம் பக்கம் பார்க்க)

## 72 மணி நேரத்திற்குள் பாரியஇராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கில் அடுத்து வரும் 72 மணித்தியாலங்களுக்குள் பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விஸ்தரிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும்.

விடுதலைப் புலிகளின் வலுவிடமான யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு முன்னர் வவு (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடத்தை வியப்பைத் தருகிறது

### - சிறிலங்கா அதிகாரிகள் குழப்பம்

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள தீவகத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடவடிக்கையில் இறங்கியபோது விடுதலைப் புலிகள் பெருமளவில் எதிர்த் தாக்குதலில் ஈடுபடாமை குறித்து சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் குழப்பமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர். இதுபற்றி நேற்றிரவு கொழும்பிலிருந்து பத்திரிகையாளரான ஆசியன் ராஜ கருணா பி.பி.ஸிக்கு தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளின் நடத்தை வியப்பை ஊட்டுவதாக இருப்பதாக கூறியுள்ளார்.

## மாகாண சபை கலைப்பிற்கு

## தமிழீழப் பிரகடனமே

## நிவாரணம் தொடர்பான

## முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

# அரசின் நோக்கம் குறித்து புலிகள் சந்தேகம்

## — மாற்று வழிகுறித்துப் பரிசீலனை —

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு ஊடாகச் செல்லும் கண்டிவீதியை போக்குவரத்திற்கு திறந்து விடுவது சம்பந்தமாகப் புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. உருப்படியான உத்தரவாதங்களும், போர்நிறுத்த உடன்பாடுகளுமின்றி ஆனையிறவுப் பாதையைத் திறந்துவிடுவது இப்பிராந்தியத்தில் சிங்கள இராணுவ மேலாதிக்கத்திற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கலாமென இவ்வட்டாரங்கள் அச்சம் தெரிவித்தன.

யாழ்.குடாநாடு மீது பெரிய படையெடுப்பு நடாத்தப் போவதாக சிறிலங்கா இராணுவம் தமிழ் மக்களை மிரட்டிக்கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் ஆனையிறவுப் பாதுகாப்பு அரண்களைத் தளர்த்துவது மிகவும் ஆபத்தானது என புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இவ்விதமான அச்சுறுத்தல்கள் பற்றியும், புலிகளின் சந்தேகங்கள் குறித்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் இப் பேச்சாளர் கூறினார்.

அப் பேச்சாளர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில் வடபகுதியில் இராணுவநடவடிக்கை தொடரவுள்ளதாக பெரிதாக அச்சுறுத்தி வரும் சிறிலங்கா அரசாங்கம் உணவு வழங்குதல் என்ற போர்வையில் இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 15இல் பரீட்சை முடிவு

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டிற்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி அளவில் வெளிவரும் என எதிர்பார்ப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பரீட்சைக்கு 1,50,000 பரீட்சார்த்திகள் தோற்றினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேநேரம் வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இப்பரீட்சை நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ பொலிசிற்கு ஆள்சேர்ப்பு

தமிழீழப் பொலிஸ் சேவைக்கு உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. ஆண் - பெண் இருபாலாரும் சேர்க்கப்படவுள்ளனர். இதற்கான அறிவித்தல் விரைவில் வெளிவரும்.

## குடும்பஸ்தர் காலை இழந்தார்

இராணுவத்தினர் வைத்த மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 500 இல.தமிழ் அகதிகள் விரைவில் திரும்புவர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து திருப்பி அனுப்பப்படும் முதல் தொகுதியில் 500 இலங்கைத் தமிழர்கள் இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு வருவார்கள் என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இதனைத் தெரிவித்த பிரட்மன் வீரக்கோன் இரண்டாயிரம் பேரை முதல் தொகுதியில் இலங்கை அனுப்புவதற்கு இந்தியா முடிவெடுத்தபோதும் இலங்கை அரசு தற்போதைக்கு 500 பேரை மட்டுமே அனுப்பிவைக்குமாறு கேட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 72 மணி நேரத்திற்குள் பாரியஇராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கில் அடுத்து வரும் 72 மணித்தியாலங்களுக்குள் பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன.

சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை விஸ்தரிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும்,

விடுதலைப் புலிகளின் வலுவிடமான யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு முன்னர் வவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடத்தை வியப்பைத் தருகிறது

### - சிறிலங்கா அதிகாரிகள் குழப்பம்

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள தீவகத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் நடவடிக்கையில் இறங்கியபோது விடுதலைப் புலிகள் பெருமளவில் எதிர்த் தாக்குதலில் ஈடுபடாமை குறித்து சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் குழப்பமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர். இதுபற்றி நேற்றிரவு கொழும்பிலிருந்து பத்திரிகையாளரான ஆசியன் ராஜகருணா பி.பி.சிக்கு தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளின் நடத்தை வியப்பை ஊட்டுவதாக இருப்பதாக கூறியுள்ளார்.

## மாகாண சபை கலைப்பிற்கு தமிழீழப் பிரகடனமே காரணம்

### - பிரேமதாசா

(கொழும்பு)

அன்றைய வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணாக தமிழீழப் பிரகடனம் செய்தார். ஒரு நாட்டிற்குள் இன்னொரு நாட்டை அமைப்பதற்கான அதிகாரம் எமது அரசியலமைப்பில் இல்லை என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா திருக்கோணமலையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். இதன் காரணமாகவே அந்த சபையை கலைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் தற்போது வடக்கு - கிழக்கு மாகாண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணம் தொடர்பான முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு இரண்டு வார காலத்திற்கு மட்டும் உலர் உணவு நிவாரணம் வழங்கும்படி அத்தியாவசிய சேவைகள் தாயகத்திடமிருந்து விடுக்கப்பட்ட அறிவிப்பை மீள்பரிசீலனை செய்யும்படி யாழ். அரசாங்க அதிபர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தீவகத்திலிருந்து அச்சம் காரணமாக இடம்பெயர்ந்த அகதிமக்களின் தற்போதைய நிலையை கருத்திற் கொண்டே அரச அதிபர் இவ்வாறு கேட்டுள்ளார். ஆயினும் இதற்கான பதில் உடனடியாக அனுப்பி வைக்கப்படவில்லை என அறியப்படுகிறது. (தி)

## அநுராவின் நியமனம் தற்காலிகமானது

### - சிறிமா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள் தலைமைக்கு எதிரான போக்கும், குழப்பங்களும் மலிந்துள்ளதாகத் தெரியவருகின்றது. கட்சியின் செயலாளர் பதவிக்கு அநுரா பண்டாரநாயக்காவும், உப தலைவராக ஜே ஆர்.பி. சூரியப்பெருமாவும் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நியமனங்கள் தற்காலிகமானதே என சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்திருப்பதுடன் மூன்றுவார காலத்திற்குச் சீனப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளார்.

சிறிமாவோ சீனப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியபின் கட்சியின் பதவிப் பொறுப்புக்களை மீண்டும் தாமே பெற்றுக்கொள்வாரா? அல்லது வேறு எவரையும் நியமிப்பாரா? அல்லது கட்சியின் தலைமைப் பதவியைத் துறந்து பொதுவான இடதுசாரி எதிர்க்கட்சிக் கூட்டணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலையில் வயோதிபர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவர் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 11-00 மணி அளவில் இத்தற்கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலையில் 30 ஆம் வார்ட்டில் சிறுநீரக நோய் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த வேலு என்ற நோயாளியே தற்கொலை செய்துகொண்டவர்.

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் உள்ள 2ஆம் திட்டத்தைச் சேர்ந்த இவர் சமீப

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய கட்சி குறித்து அதிருப்தியாளர் யோசனை

(கொழும்பு)

தென்னிலங்கையில் புதிய அரசியல் கட்சியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. ஐ.தே.க. அதிருப்தியாளர்களும், சுதந்திரக் கட்சி அதிருப்தியாளர்களும் இணைந்து புதிய கட்சியைத் தோற்றுவிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனராம்.

மொனராகலையில் இவ்வாரம் நடைபெறவிருக்கும் ஐ.தே.க. அதிருப்தியாளர்களின் பொதுக் கூட்டமே இறுதிக் கூட்டமாக இருக்கக்கூடும் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டமையினை எதிர்த்து தாக்கல் செய்த ரிட் மனு மீதான சுப்ரீம் கோர்ட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வெலிக்கந்தையில் புலிகள் அதிரடி;

# 14இராணுவம் பலி! ஏழுபேர் காயம்

(கொழும்பு)

வெலிக்கந்தையில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய பதின்நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஏழு பேர் படுகாயம் அடைந்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது,

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள வெலிக்கந்தை என்னும் இடத்தில் ரோந்து சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை நடாத்தியதாகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

## மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

## இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203]


## 45-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்

26-0-1974

மறைவு

14.09-1991



லெப். குலன்

[சபாபதி பார்த்தீபன்]

தியாக வேள்வியிலே தீய்ந்தனையோ பார்த்தீபனே
தியாக மெப்போது நிம்மதியாய் மூச்சு விடும்
சிரித்த வுன் முகம் காணச் சிந்தை துடிக்குதடா
சரித்திரத்து நாயகனே சத்தியமே வெல்லுமடா!

வீரமரணமடைந்த எங்கள் செல்வன் பார்த்தீபனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று எமதில்லத்தில் நடைபெறவுள்ளதால் உறவினர், நண்பர்கள் சகபோராளிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்.
[B/3393]

இங்கனம் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்,
உற்றார், உறவினர் நண்பர்கள்.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



## 55ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



வீரவேங்கை பாறூக்

(தனபாலசிங்க சிறீதரன்)

(சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

தாயின் மடியில் 1973 - 01 - 02

தாயக மீட்பில் 1991 - 09 - 05

திதி: 29-10-1991

தங்கத் தமிழ் மகனே
தரணி புகழ் தானே
பண்பும் வையாது பண்புடனே - எமைப்
பரிதவிக்க விட்டதேனோ?

வீறு கொண்டு சென்ற நீ
விரைந்து வருவாயென்று
பாறூக் உனை நினையாது
பலிவி கொண்ட நாளுமுண்டோ?

பால்மணம் மாறாத பாலகன் உன் முகத்தை மீண்டும்
பார்த்துப் பரவசம் அடைவதெப்போதடா
சீலனே சிறீதரனே சிரித்த முகத்துடன்
இந்நை களைந்தவனே
சாவைச் சிறக்க முன்னே சாய்ந்து விட்டனையே தம்பீ

கொண்டதாகம் தமிழீழம் காணமுன்னே - நீ
கண்ட கனவுகள் போதுமென்று
களங்கமற்றுக் கண்மூடி விண்ணேகி
விரைந்து விட்டாயே கண்ணா!

கண்பற்ற பாதகன் பாய்ச்சிய குண்டு
பாவி உன் சிரத்தில் பாய்ந்து பதம் பார்த்ததுவே
பிஞ்சுமுகம் பாராமல் பேதை குரல் கேளாமல்
இணை இழந்த - அன்னையுடன்
செஞ்சுடரே நீ சென்ற இடம் கேட்டு
நெஞ்சொடிய ஓலமிடும் நின் தந்தையும்
அன்பினை ஊட்டிய அண்ணாவுடன்
அரவணைத்த சித்தப்பாவும்
கண்ணீரே ஆறாகக் கதறியழக் கடைக்குட்டி
உனைக் காணாத பிரமிப்பில் நினைவிழந்து
செயலிழந்த
அன்னைமார் சிறகொடிந்த பறவையாய்

## பொலிஸாரின் இடைநிறுத்த உத்தரவுரத்து

(சென்னை)

கடமை தவறியதற்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட இரு பொலிஸ் அதிகாரிகளின் சஸ்பென்ட் உத்தரவை தமிழ்நாட்டு மாநில நிர்வாக மையம் ரத்துச் செய்துள்ளது. சிறிபெரும்புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்ட குண்டு வெடிப்பு சம்பவம் நடந்த போது கடமையிலிருந்த இவர்கள் மூன்று பொலிஸ்காரர்களை தமிழக அரசு தற்காலிக வேலை நீக்கம் செய்தமை தெரிந்ததே. இவர்களில் எட்டும் பொலிஸ்காரர்கள் நடுவர் நீதி மன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். எஞ்சியுள்ள அறுவோர் விதானை ஒழுங்கு நடவடிக்கைகளை ஜனவரி மதிமைந்தாம் இதற்கு முன்னாக முடிக்க வேண்டுமென்றும் இல்லையேல் அவர்களது வேலைநீக்க உத்தரவும் ரத்துச் செய்யப்பட்டு விடும் என்றும் நீதிமன்றம் தமிழக அரசுக்கு தெரிவித்துள்ளது.

## ஐ.நா.சபை அமைப்பில் சீர்திருத்தம் தேவை

(ஜூலி)

மாறிவரும் உலகச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் ஐ.நா. நிறுவனம் தனது அமைப்புகளில் சீர்திருத்தம் செய்யவேண்டும். குறிப்பாக பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் எடுவாடோ பெலரியோ கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐ.நா. நிறுவனத்தின் 46 வது நிறைவு தினத்தைக் குறிக்கும் வகையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய எடுவாடோ பெலரியோ இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், ஐ நாடுகள்சபை மற்றும் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்புக்கான அவையாக விளங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கம்போடிய

## சமாதான ஒப்பந்தத்திற்கு இந்தியப்பிரதமர் வரவேற்பு

(டில்லி)

கம்போடியப் பிரச்சினை தொடர்பாக சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளமையை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் வரவேற்றுள்ளார். அத்துடன் இவ் ஒப்பந்தம் அமுலாக்கப்படுவதை இந்தியா முழு அளவில் ஆதரிக்கும் என்றும் குறிப்பிட்டார். கம்போடியாவின் மறுசீரமைப்புக் காலத்தில் வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்தியா செய்யும் என்று கம்போடிய இளவரசர் சிகானுக்கிடம் உறுதியளித்திருப்பதாகவும் இந்தியப் பிரதமர் கூறியுள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 28

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் நாவற்குழியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

சர்வா (கணபதிப்பிள்ளை பராராசசிங்கம் - புலியம்பொக்கணை)

28-0 -1974



மறைவு

14.09-1991

## லெப். குலன்

[சபாபதி பார்த்திபன்]

தியாக வேள்வியிலே தீய்ந்தனையோ பார்த்திபனே
தியாக மெப்போது நிம்மதியாய் மூச்சுவிடும்
சிரித்த உன் முகம் காணச் சிந்தை துடிக்குதடா
சரித்திரத்து நாயகனே சத்தியமே வெல்லுமடா!

வீரமரணமடைந்த எங்கள் செல்வன் பார்த்திபனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று எமதில்லத்தில் நடைபெறவுள்ளதால் உறவினர், நண்பர்கள் சக போராளிகள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்.
[B/3393]

துயரில் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்,
உற்றார், உறவினர் நண்பர்கள்.

## 90-ம் நாள் நினைவஞ்சலி

| வீர ஜனனம் | | வீர மரணம் |
|---|---|---|
| 17 |  | 28 |
| - | | - |
| 01 | | 07 |
| - | | - |
| 1971 | | 1991 |

### துணைப்படை வீரா சுரேஷ்

(செல்வராஜா தவபாலசிங்கம்)

திருக்கோணமலை 6-ம் வட்டாரம்

வீரவரலாற்றில் வெற்றித் திருமகனை
வேங்கை அணைக்கின்ற வெற்றி மிகு பாதையிலே
தீரன் தவபாலசிங்கப் பெயர் கொண்ட
திண்மைச் சுரேஷ் என்போன் ஆனையிறவுப்போர்
நேர்நின்று மோதி நிகழ்த்திவிட்ட சாதனையை
நெஞ்சம் மறவோம் என்றும் நினைத்து நிற்போம்
வீரன் திருமணையில் மண்ணின் மணங் காட்டி
வெற்றிச் சுவர்க்க முற்றான் என்றென்றும் வாழியவே

(B/3394)

தாய், சகோதரர்கள்
மற்றும் அவரது நண்பர்கள்

## வீரவேங்கை பாறூக்

(தவபாலன் சிறீதரன்)

(சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்)

தாயின் மடியில் 1973 - 01 - 02

தாயக மீட்பில் 1991 - 09 - 05

திதி: 29-10-1991

தங்கத் தமிழ் மகனே
தரணி புகழ் தாயே
பங்கம் வையாது பண்புடனே - எமைப்
பரிதவிக்க விட்டதேனோ?

வீறு கொண்டு சென்ற நீ
விரைந்து வருவாயென்று
பாறூக் உனை நினையாது
பசி கொண்ட நாளுமுண்டோ?

பால்மணம் மாறாத பாலகன் உன் முகத்தை மீண்டும்
பார்த்துப் பரவசம் அடைவதெப்போதடா
சீலனே சிறீதரனே சிரித்த முகத்துடன்
சிந்தை கவர்ந்தவனே
சாவைச் சிறக்க முன்னே சாய்ந்து விட்டனையே தம்பி

கொண்டதாகம் தமிழீழம் காணமுன்னே - நீ
கண்ட கனவுகள் போதுமென்று
களங்கமற்றுக் கண்மூடி விண்ணேகி
விரைந்து விட்டாயே கண்ணா!

கண்பற்ற பாதகன் பாய்ச்சிய குண்டு
பாவி உன் சிரத்தினைப் பாய்ந்து பதம் பார்த்ததுவே
பிஞ்சுமுகம் பாராமல் பேதை குரல் கேளாமல்
தனை இழந்த - அன்னையுடன்
செஞ்சுடரே நீ சென்ற இடம் கேட்டு
நெஞ்சொடிய ஓலமிடும் நின் தந்தையும்
அன்பினை ஊட்டிய அன்ராவுடன்
அரவணைத்த சித்தப்பாவும்
கண்ணீரே ஆறாகக் கதறியழக் கடைக்குட்டி
உனைக் காணாத பிரமிப்பில் நிலையிழந்து
செயலிழந்த
அண்ணாமார் சிறகொடிந்த பறவையாய்ச்
சிந்திக்கும் தங்கை
கனிவான சிரிப்பினாலே கவர்ந்து - உன்
கதை கேட்ட உற்றார் உறவினர்
தனியான பாசத்தினால் துணை இழந்த தோழர்கள்
யாருக்கு யார் கூறுவது?

மண்ணாறு சென்ற நீ மண்ணுடன் கலந்து
விட்டாய் - ஆனால் உன்
வரலாறு என்றுமே வாழும் - நம் ஈழத்தில்

விலையில்லா வீரம் புரி வித்தகனே! பாறூக்கே
சிலையுடனே நிலைத்து சிறந்தோங்கும் நின்புகழே!

சிறீதரா எங்கிருப்பினும் உன் நினைவு எங்கள் உள்ளத்தில் நீங்காது நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவருடன் மணலாற்றில் வீரமரணமெய்திய சக போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நாளை (29-10-1991) செவ்வாய்க் கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டி நிகழ்வில் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் சக இயக்க உறுப்பினர்கள் யாவரும் கலந்து கொண்டு மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

அப்பா, அம்மா, சித்தப்பா, அன்ரா
அண்ணாமார், தங்கை பெரியம்மா, அக்காமார்
அத்தான்மார், அம்மம்மா, மாமாமார், மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்

[B-3381]

திரு. எஸ் தவபாலன்
சிற்பிட்டி தெற்கு, நீர்வேலி

ஊடாகவே இலங்கையில் வேர்... டுக் கொண்டுள்ளார்.

...யாக விளங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கம்போடிய

## சமாதான ஒப்பந்தத்திற்கு இந்தியப்பிரதமர் வரவேற்பு

(டில்லி)

கம்போடியப் பிரச்சினை தொடர்பாக சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளமையை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் வரவேற்றுள்ளார். அத்துடன் இவ் ஒப்பந்தம் அமுலாக்கப்படுவதை இந்தியா முழு அவ வில் ஆதரிக்கும் என்றும் குறிப்பிட்டார். கம்போடியாவின் மறுசீரமைப்புக் காலத்தில் வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்தியா செய்யும் என்று கம்போடிய இளவரசர் சிஹானுக்கிடம் உறுதியளித்திருப்பதாகவும் இந்தியப் பிரதமர் கூறியுள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 28

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் நாவற்குழியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

**சர்வா** (கணபதிப்பிள்ளை பராசசிங்கம் - புலியம்பொக்கணை)

1988 ஆம் ஆண்டு இணுவிலில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டு சுன்னாகத்தில் வைத்து தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட துவிரமான நிலைய உரிமையாளரான காங்கேசன்துறையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு வந்தாறுமூலையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**மேஜர் கண்ணன்** (செல்லையா உதயநாதன் - கொம்மாந்துறை, மட்டக்களப்பு)

**சங்கர்** (செல்வரத்தினம் பசோசிலன் - தம்பட்டை)

**பிருந்தன்** (சாமிநாதன் சந்திரமோகனராஜ் - செங்கலடி.)

மண்டூணைத்துறை வாவியில் படகில் சென்றுகொண்டிருக்கும்போது சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழ்ப் பயணிகள்

யாழ். நகரப்பகுதி மற்றும் கொக்குவில், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட 9 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/ 3391)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

## இந்தியா பாக். இடையே பேச்சுவார்த்தை

(டில்லி)

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே சர்ச்சைப் பகுதி பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இரண்டு நாள் பேச்சுவார்த்தை ராவல்பிண்டியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செயலாளர் ஐ.பி. கோசலாவும், பாகிஸ்தானிய பாதுகாப்புத்துறைச் செயலாளர் சையத் அபாஸ் ஜிலானியும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்கின்றனர்.

# அரபுகளுடன் உடன்பாடு வேண்டும் டெல்அவிவ்வில் ஆர்ப்பாட்டம்

(டெல் அவிவ்)

மட்றிட்டில் வரும் புதன்கிழமை நடைபெற இருக்கும் மேற்காசிய சமாதான மாநாட்டில் அரபுகளுடன் உடன்பாடு காணுமாறு இஸ்ரேலிய அரசை வற்புறுத்தி முப்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் டெல் அவிவ்வில் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள் என்றும், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை விட்டு இஸ்ரேல் வெளியேறி யூதக் குடியிருப்புகள் கட்டப்படுவதை நிறுத்தி விட வேண்டும் என்று இஸ்ரேலிய பிரதமர் சமீரை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப் பகுதியில் சமாதான மாநாட்டிற்கு எதிராகவும் போராட்டம் நடத்தப்பட்டது.

மேலும், ''இஸ்ரேல் தனது நலன்களை விட்டுக்கொடுக்காது சமாதானத்தை விரும்புகின்றது'' என்று இஸ்ரேலிய பிரதமர் சமீர்செய்தியாளரின் கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

அத்துடன் இஸ்ரேலியப் பிரதமர் சமீரும், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தும் கடும் போக்குகளைக் கைவிடப் போவதாக அறிவித்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

## சார்க் திரைப்படவிழா

நவம்பர் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகும் 'சார்க்' நாடுகளின் உச்சி மாநாட்டினை ஒட்டி சார்க் திரைப்பட விழா வொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்தத் திரைப்பட விழா நவம்பர் 1 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ.ஜே ரணசிங்கா இத் திரைப்பட விழாவினை ஆரம்பித்து வைப்பார்.

## ஜப்பானிய புதிய பிரதமராக கிச்சின் நியாசாவா தெரிவு

(டோக்கியோ)

ஜப்பானின் ஆளும் லிபரல் ஜனநாயகக்கட்சி அடுத்தபிரதமராக கிச்சின் நியாசாவாவைத்தேர்ந்தெடுத்திருக்கிறது.

அக்கட்சித் தலைமைப் பதவிக்காக நேற்று நடைபெற்ற தேர்தலில் 72 வயதான முன்னாள் நிதியமைச்சர் நியாசாவாவுக்கு மொத்தம் 492 வாக்குகளில் 285வாக்குகள் கிடைத்துள்ளன.

பாராளுமன்றக் கீழ்ச்சபையில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சிக்குப் பெரும்பான்மை பலம் இருப்பதால் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பவர் பிரதமர் பதவியை வகிக்க வேண்டும்.

இந்த தலைமைப் பதவிக்கான போட்டியில் மூன்று வேட்பாளர்கள் இருந்தனர்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தின் விசேஷ கூட்டத் தொடரில் கிச்சின் நியாசாவா பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

## கல்விப் பணிப்பாளர்களின் அவசரகூட்டம்

(நமது நிருபர்)

க.பொ.த. (சாதாரணம்) வகுப்பிற்கான முன்னோடிப் பரீட்சை நடாத்துவது சம்பந்தமாகவும், இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்வி வசதி சம்பந்தமாகவும் அவசர கூட்டமொன்றுஇன்றுகாலைபத்து மணியளவில் யாழ்ப்பாண கல்வித் திணைக்களப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் சகல கல்விக் கோட்டங்களையும் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும், வேலணைக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களையும், இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலை அதிபர்களையும் தவறாது சமுகம் தருமாறு யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பாகிஸ்தான் கிரிக்கட் குழு இந்திய விஜயம் ரத்து

(இஸ்லாமாபாத்)

இந்திய - பாகிஸ்தான் கிரிக்கட் அணிகளுக்கிடையே இந்தியாவில் இந்த வாரம் நடைபெறவிருந்த ஐந்து ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளில் கலந்து கொள்ளப் போவதில்லையென்று பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள இந்து மதத் தீவிரவாதிகளின் மிரட்டல்களை படுத்து எச்சரிக்கை பகடந்திருப்பதனாலேயே, பாகிஸ்தான் கிரிக்கட் அணியின் இந்திய விஜயம் ஒத்திப் போடப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் கூறியுள்ளது;

முன்னதாக பம்பாய் மைதானத்தில் நடைபெறவிருந்த கிரிக்கட் போட்டி ரத்துச் செய்யப்பட்டு சென்னையிலுள்ள சேப்பாக்கம் மைதானத்தில் இப் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

## சர்வகட்சி மாநாட்டில் வரு. முடிவுக்குள் தீர்மானம்

(கொழும்பு)

சர்வகட்சிமாநாட்டில் இந்த வருட இறுதிக்குள் இறுதித்தீர்மானங்களை எடுக்கும் என்று தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழு அரசியல் அமைப்பில் 17 ஆவது சட்ட திருத்தம், இரண்டாவது சபை ஒன்றை உருவாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக கடந்த வெள்ளியன்று நடத்தப்பட்ட மாநாட்டில் ஆராயப்பட்டன.

இது தொடர்பாக இந்த வருட இறுதிக்குள் நல்லதொரு முடிவு எடுக்கத்தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்றுமதி இலங்கைக்கான கடலுணவு

## இனப்பிரச்சினையால் குறைவடைந்துள்ளது

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை காரணமாக கருவாட்டு ஏற்றுமதி மிகவும் குறைந்துள்ளது என்று நேற்று முன் தினம் தூத்துக்குடியில் நடைபெற்ற கடலுணவுப் பண்டங்கள் பற்றிய கூட்டத்தில் பேசிய கடற் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் எம். சக்திவேல் தெரிவித்தார்.

1986 இல் 6138 தொன்னாக இருந்த கருவாட்டு ஏற்றுமதி இவ்வாண்டு 1413 தொன்னாகக் குறைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் பலியான

## இந்திய இராணு. சிறிலங்கா கௌரவிக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணப் பகுதிகளில் விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிட்டுப் பலியாகிய ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரைக் கௌரவிப்பது சிறிலங்கா அரசின் கடமையாகும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என்.என். ஜா இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

இதுபற்றிகொழும்பிலிருந்து வெளியாகும் வாராந்த செய்திப் பத்திரிகையான சண்டே டைம்ஸ் வெளியிட்ட செய்தியில் மேலும் இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே விடுதலைப் புலிகளுடன் வடக்கு கிழக்கு மாகாணப் பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் போரிட்டதாக என்.என் ஜா கூறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக அரசின் கோரிக்கை தீவிரமாக ஆராயப்படுகிறது

**- நரசிம்மராவ்**

(சென்னை)

''தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை அனுப்ப வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கைமீது நடவடிக்கை எடுப்பது குறித்து மத்திய அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது'' என்று இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று புதுடில்லி திரும்புவதற்கு முன்னர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போதே நரசிம்மராவ் இதனைத் தெரிவித்தார்.

## அதிபர் ஆசிரியர்கள் பங்குபற்றவும்

(நமதுநிருபர்)

மருதனாமடம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த உரும்பராய், கோப்பாய், வசாவிளான் கொத்தணிகளில் கடமைபுரியும் பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு உரும்பராய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேபோல் அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி கொத்தணிகளில் கடமை புரியும் அதிபர்களையும், ஆசிரியர்களையும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் கலந்துரையாடலுக்கு சமுகம் தருமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

---

500 இல.

லது என்று தெரிவித்தார்.

அத்துடன்திருக்கோணமலையைச் சேர்ந்தவர்களையே முதல் தொகுதியில் அனுப்பி வைக்கும் படியும் ஏனெனில் இந்த இடம் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளதால் இவர்களைச் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

72 மணி

வியா, முல்லைத்தீவு, ஆகிய பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

இதனால் இராணுவத்தின் அடுத்த தாக்குதல் வவுனியா மாவட்டத்திலேயே நடத்தப்படும் என்றும் யாழ். குடாநாட்டின் சகல நுழைவாயில்களையும் சிறிலங்காப் படையினர் கைப்பற்றியுள்ளதால் அங்கிருந்து வவுனியாவிற்கு புலிகள் தமது ஆட்களை அனுப்ப முடியாது என்றும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அடுத்த வாரமளவில் பாரிய தாக்குதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளப்போவதாக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் தெரிவித்துள்ளார். செய்தியாளரிடம் நேற்று முன்தினம்பேசிய மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தாக்குதல் இடம் குறித்தோ நேரம் குறித்தோ எதுவித தகவலும் கூறமுடியாது எனவும் தெரிவித்தார்.

---

ஆனையிறவுப்

னுவ விநியோகம் ஆக்கிரமிப்பு முயற்சியில் ஈடுபடலாம் எனவும் தெரிவித்தா

யாழ். மாவட்டத்திற்கு உணவுப் பொருள்கள் அனுப்புவதற்கு சிறிலங்கா அரசாங்கம் விரும்பும் பட்சத்தில் அதற்குப் பலமாற்று வழிகளும் மார்க்கங்களும் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டிய அப்பேச்சாளர் ஆனையிறவு பாதையை திறப்பதென்பது ஆனையிறவு முகாமில் உள்ள இராணுவத்தினருக்குத் தரை மார்க்கமான விநியோகத்தைப் பெறுவதற்கான ஒரு திட்டமே எனவும் குறிப்பிட்டார். ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொண்ட ஆனையிறவு முகாமிற்கு வான்வழி விநியோகம் பெரும் செலவீட்டை ஏற்படுத்துவதினாலும் தற்பொழுது வடக்கில் மழை காலமும் மோசமான வானிலையும் ஆரம்பித்ததனால் வான்வழி விநியோகம் பாதிப்படையக் கூடுமாகையாலும் சிறிலங்கா அரசாங்கம் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்குக் கவனம் செலுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை யாழ். குடாநாட்டிற்கான உணவு விநியோகத்திற்கு மாற்றுவழி தேடுவது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் விடுதலைப் புலிகள் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

வாழ்க்கைத்திறன்

பட்டுள்ள பாடசாலைகளின் விபரத்தையும், 1993 இல் ஆண்டு 7 இல் இக்கல்வியைப் புகுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இரண்டு பாடசாலைகளையும் ஒவ்வொரு கோட்டக் கல்வி அதிகாரிகளும் முன்னுரிமை அடிப்படையில் சிபாரிசு செய்து உடனடியாக தெரிவிக்குமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் பணித்துள்ளார்.

---

புதிய

தீர்ப்பு இவ்வாரத்தில் வெளியிடப் படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது எனினும் ஐ.தே கவிலிருந்துவெளியேற்றப்பட்டவர்களை எக் கட்டத்திலும் மீண்டும் கட்சியில் இணைக்க தயாராக இல்லை என்று கண்டியில் நடந்த பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருந்தார்.

---

குடும்பஸ்தர்

தர் ஒருவர் தனது காலை இழந்தார்.

நேற்றுமுன்தினம் நண்பகல் அளவில் கீரிமலையில் உள்ள தனது வீட்டைப்பார்ப் பதற்காக சென்ற கதிர்காமத்தம்பி (வயது40) என்றகுடும்பஸ்தரே தனதுகாலை இழந்தவராவர்.

இவர் தற்போது யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். [உ]

---

தமிழீழப்

அமைச்சின் பொறுப்பை ஆளுநர் நவின் செனவிரட்னா மேற்கொள்கிறார் என்றும் தெரிவித்தார்.

---

அநுராவின்

ஒன்றைக் கட்ட முனைவாரா? என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெரிய வரவில்லை.

இவரோடு இவரது மகள் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்காவும், கட்சியைச் சேர்ந்த ஆதரவாளர்கள் சிலரும் சேர்ந்து சுயேச்சைக் குழுவாக பாராளுமன்றத்திலும், வெளியிலும் செயல்படுவது என்றும் தீர்மானித்துள்ளனர் என்றும், அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதேவேளைகட்சியின்பேரில் அதிருப்தி கொண்டுள்ள ஒரு சாரார் கட்சியிலிருந்து வெளியேறத் திரை மறைவில் திட்டமிட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

---

வெலிக்கந்தையில்

தெரிகிறது.

நேற்று இடம்பெற்ற இத் தாக்குதலில் பதினான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், ஏழு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.பி.சி. நேற்றிரவு அறிவித்தது.

---

யாழ்

நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கை காரணமாக அவரது சடலத்தை சொந்த இடத்திற்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.